தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2041 – பங்குனி 26

2010 ஏப்ரல் 9, வெள்ளிக்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், புதிய சட்டப் பேரவை–தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“நாடோறு நாடிக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு”

உழைப்போர் உள்ளம் வாடாமல் இருக்கும் வரையில் உலகின் செழிப்பும் வாடாமல் இருக்கும். எனவே, உழைப்போர் நிலைமையை ஒவ்வொரு நாளும் அரசினர் ஆய்ந்தறிந்து ஆவன செய்ய வேண்டும்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. இரங்கற்குறிப்பு

சட்டீஸ்கர் மாநிலம், நக்சலைட் தாக்குதலால் மரணம் அடைந்த மத்திய தனிப் படைக் காவலர்களுக்கு இரங்கல்

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், சொல்லுங்கள்.

[2010 ஏப்ரல் 9

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டீஸ்கர் மாநிலம், தண்டேவாடாவில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுடைய தாக்குதலுக்கு இரையாகி . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பீட்டர் அல்போன்ஸ், நானே அந்தப் பொருளை எடுக்கிறேன்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: முதலிலேயே எடுக்கிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நானே முதலில் அந்தப் பிரச்சினையை எடுக்கிறேன்.

6–4–2010 அன்று சட்டீஸ்கர் மாநிலத்தில் நக்சலைட் தீவிரவாதிகளால் தாக்கப்பட்டு, 75 காவலர்கள் வீரமரணம் அடைந்தது குறித்தும், அவர்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு. மோகனரெங்கம், திரு. சேகர் மற்றும் திரு. விஜயகுமார் ஆகிய மூவரும் மரணம் அடைந்தது குறித்தும் இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும், அஞ்சலியையும் தெரிவிப்பதோடு, அவர்களை இழந்து வருந்தும் அவர்களது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் இப்பேரவை ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

மறைந்த வீரர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(பின்னர், உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காத்தனர்.)

2. வரவு-செலவுத் திட்டம், 2010-2011, பொது விவாதமும் பதிலுரையும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010–2011 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதமும் பதிலுரையும். முதலில், பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரம் 30 நிமிடங்கள்.